## DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF DISTRICT MUNCIF CUM JUDICIAL MAGISTRATE, KODAVASAL

| | | |
|---|---|---|
| Case No. | : | C.C NO.142/2025 |
| Deposition of witness | : | P.W.7 |
| Name | : | ரிக்கிபாண்டி |
| Father's /Husband Name | : | பால்ராஜ் |
| Village | : | செம்பியன் கூந்தலூர் |
| Taluk | : | குடவாசல் |
| Age | : | 24 |
| Occupation | : | ஆட்டோ ஓட்டுநர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 9th day April 2026.
Accused present.

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்படி முகவரியில் வசித்து ஆட்டோ ஓட்டி வருகிறேன். அ.சா.1 பன்னீர் செல்வம், ஆஜர் எதிரி மற்றும் அ.சா.5 மோகனப்பிரியா ஆகியோர்களை தெரியும். மேற்படி அனைவரும் எனது ஊரை சேர்ந்தவர்கள் ஆவார்கள். என்னிடம் தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். மேற்படி கையொப்பத்தை கடந்த 17.06.2025ம் தேதி அன்று மாலை சுமார் 04.00 மணிமுதல் 05.30 மணியளவில் மோகனப்பிரியா என்பரின் வீட்டு வாசலின் முன்பாக போலீசார் ஆஜர் எதிரிக்கும் பன்னீர்செல்வத்திற்கும் ஏற்பட்ட தகராறு சம்பந்தமாக போலீசார் விசாரித்து வரைபடம் வரைந்தார்கள். அது சம்பந்தமாக எங்களிடம் சாட்சி கையொப்பம் கேட்டார்கள். அதில் நானும் மோகனப்பிரியா என்பவரும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். (**பார்வை மகசர் ஏற்கெனவே அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.**) போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** :-

அ.சா.1க்கும் ஆஜர் எதிரிக்கும் தொடர்பாக நடந்த பிரச்சனை குறித்து எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரியல்ல. நான் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். நான் அ.சா.1 ஐ எந்த மருத்துவமனையில் சேர்த்தேன் என்றால் நன்னிலம் அரசு மருத்துவமனையில் சேர்த்தேன். போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றாலும் அ.சா.1 எனது ஊர்க்காரர் என்பதால

அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான்.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை.

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.04.09 18:46:12 +0530

`

District Munsif -Cum-
Judicial Magistrate,
Kodavasal.